● அம்பேத்கரை அவமதித்ததாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து, கிருஷ்ணகிரியில் திமுக கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்எல்ஏ தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் பங்கேற்ற திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள்.

● தருமபுரி மேற்கு மாவட்ட திமுக சார்பில் பாப்பிரெட்டிப்பட்டியில் மாவட்ட செயலாளர் பி.பழனியப்பன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

● தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் அருகில் திமுக சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

மத்திய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து திமுகவினர் ஆர்ப்பாட்டம்

■ கிருஷ்ணகிரி / ஓசூர் / தருமபுரி

அம்பேத்கரை அவமதித்ததாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து, கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே கிழக்கு மாவட்ட திமுக சார்பில், ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்துக்கு, மாவட்டச் செயலாளர் டி.மதியழகன் எம்எல்ஏ தலைமை வகித்தார். அவைத் தலைவர் தட்ரஅள்ளி நாகராஜ், நகரச் செயலாளர் நவாப், நகராட்சித் தலைவர் பரிதா நவாப், முன்னாள் எம்எல்ஏ செங்குட்டுவன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில், மத்திய அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பினர்.

முன்னாள் எம்பி வெற்றிச்செல்வன், பொதுக்குழு உறுப்பினர் அஸ்லம், நிர்வாகிகள் கேவிஎஸ் சீனிவாசன், பிடி. அன்பரசன், இளைஞர் அணி அமைப்பாளர் டிசிஆர் தினேஷ் ராஜன், துணை அமைப்பாளர் விசிஎன் மகேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

● அம்பேத்கரை அவமதித்ததாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து, கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில், மாவட்ட துணைத் தலைவர் பி.சி.சேகர், நிர்வாகிகள் ஏகாம்பாவாணன், ரகமத்துல்லா, லலித் ஆண்டனி, துரைசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர். (அடுத்தபடம்) தருமபுரி கிழக்கு மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் மாவட்ட செயலாளர் சி.கே.சாக்கன்சர்மா தலைமையில் அரூரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஓசூர் ராம்நகர் அண்ணா சிலை அருகே கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக சார்பில், ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்துக்கு, எம்எல்ஏ பிரகாஷ் தலைமை வகித்தார். மேயர் சத்யா, முன்னாள் எம்எல்ஏ முருகன், துணை மேயர் ஆனந்தைய்யா, மாநகரட்சி பொதுச் சுகாதாரக் குழு தலைவர் மாதேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தருமபுரியில் ஆர்ப்பாட்டம்

இதேபோல தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் அருகில், மத்திய அமைச்சர் அமித் ஷாவைக் கண்டித்து திமுக சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்துக்கு தருமபுரி நகரச் செயலாளர் மாது தலைமை வகித்தார். அதேபோல, காரிமங்கலம், பாலக்கோடு, மாரண்டஅள்ளி உள்ளிட்ட இடங்களிலும் திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதுதவிர, காங்கிரஸ் கட்சி சார்பில் தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் அருகில் கட்சியின் மாவட்ட பொறுப்பாளர் தீர்த்தராமன் தலைமையில் மத்திய அமைச்சர் அமித் ஷா-வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அதேஇடத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மாவட்ட செயலாளர் சிசுபாலன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாலக்கோடு உள்ளிட்ட இடங்களில் விசிக சார்பிலும் இதே கோரிக்கையை முன்வைத்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

வியர்க்குதே

தருமபுரி

● தருமபுரி மற்றும் பைசுஅள்ளி துணை மின் நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் நாளை (21-ம் தேதி) மாதாந்திர பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. எனவே, அன்று காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை மதிகோன்பாளையம், கோட்டை, தருமபுரி பேருந்து நிலையம், கடைவீதி, அன்னசாகரம், விருப்பாட்சிபுரம், பழைய தருமபுரி, கடகத்தூர், கொளகத்தூர், குண்டல்பட்டி, ஏ.ஜெட்டிஅள்ளி, ஏ.ரெட்டிஅள்ளி, வி.ஜி.பாளையம், செட்டிக்கரை, நீலாபுரம், வெள்ளோலை, கோம்பை, ஏ.கொல்லஅள்ளி, குளியனூர், மொடக்கேரி, முக்கல்நாயக்கன்பட்டி, நூலஅள்ளி, குப்பூர், சோலைக் கொட்டாய், மூக்கனூர், மாட்லாம்பட்டி, கெங்குசெட்டிப்பட்டி, காளப்பனஅள்ளி, குப்பாங்கரை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் மின் விநியோகம் நிறுத்தப்படும் என்று தருமபுரி கோட்ட மின் வாரிய செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

அரூர்

● தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி துணை மின் நிலையத்தில் நாளை (21-ம் தேதி) மாதாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. எனவே, பாப்பிரெட்டிப்பட்டி, வெங்கட சமுத்திரம், மோளையானூர், பையர் நத்தம், தேவராஜ பாளையம், சாமியாபுரம் கூட்டு ரோடு, காளிப்பேட்டை, மஞ்சவாடி, எச்.புதுப்பட்டி, அ. பள்ளிப்பட்டி, அதிகாரப்பட்டி, பாப்பம்பாடி, எருமியாம்பட்டி, கவுண்டம்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நாளை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின் நிறுத்தம் செய்யப்படும், என அரூர் செயற்பொறியாளர் முத்துசாமி தெரிவித்துள்ளார்.

ஓசூர்

● ஓசூர் மின் நகர் மற்றும் சிப்காட் பேஸ் 2 மின் நிலையங்களில் நாளை (21-ம் தேதி) மாதாந்திரப் பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளன. எனவே நாளை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை சானசந்திரம், ஒன்னல்வாடி, சானமாவு, தொரப்பள்ளி, காரப்பள்ளி, கொல்லப்பள்ளி, திருச்சிப்பள்ளி, பழைய டெம்பிள் அட்கோ, அலசநத்தம், பெரியார்நகர், பாரதிதாசன்நகர், குமரன்நகர், வள்ளுவர்நகர், புதிய பேருந்து நிலையம், காமராஜ் காலனி, அண்ணாநகர், எம்ஜி சாலை, நேதாஜி சாலை, சீத்தாராம் நகர், வானவில் நகர் மற்றும் சிப்காட் பேஸ் 2 பகுதிக்கு உட்பட்ட சிப்காட் பகுதி 2, பத்தலபள்ளி, குமுதேபள்ளி, பென்னாமடம், எலெக்ட்ரானிக் எஸ்டேட், மோர்னப்பள்ளி, ஏ.சாமனப்பள்ளி, ஆலூர், புக்கசாகரம், அதியமான் கல்லூரி, கதிரேபள்ளி, மாருதிநகர், பேரண்டப்பள்ளி, ராமச்சந்திரம், சண்டப்பட்டி, அன்கேப்பள்ளி ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் நிறுத்தம் செய்யப்படும் என்று ஓசூர் மின்வாரிய செயற்பொறியாளர் குமார் தெரிவித்துள்ளார்.

தருமபுரியில் சிறுபான்மையினர் உரிமைகள் தின விழா

105 பயனாளிகளுக்கு ரூ.12 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவி வழங்கல்

■ தருமபுரி

தருமபுரியில் நடந்த சிறுபான்மையினர் உரிமைகள் தின விழாவில் ரூ.12 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு ஆட்சியர் வழங்கினார்.

தருமபுரி ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிட கூட்டரங்கில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் சிறுபான்மையினர் உரிமைகள் தின விழா நேற்று நடந்தது. விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் சாந்தி தலைமை வகித்தார். விழாவில் ஆட்சியர் பேசியது:

தமிழக அரசு சிறுபான்மையின மக்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. சிறுபான்மையினர் உரிமைகளை காக்க ஆண்டுதோறும் டிசம்பர் 18-ம் தேதி சிறுபான்மையினர் உரிமைகள் தின விழா கொண்டாடப்படுகிறது.

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின மக்கள் சுயமாக தொழில் செய்து பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள தனிநபர் காலக் கடன் திட்டம், சுய உதவிக்குழு மூலம் சிறுகடன் திட்டம் ஆகியவற்றை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

மேலும், சிறுபான்மையின மாணவ, மாணவியர் பள்ளிப் படிப்பு, பள்ளி மேற்படிப்பு, தகுதி மற்றும் வருவாய் அடிப்படையில் கல்வி உதவித் தொகை, தேசிய கல்வி உதவித் தொகை, பெண்கல்வி ஊக்குவிப்புத் தொகை உள்ளிட்ட கல்வி உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன.

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு கல்வி உதவித் தொகை, கண்கண்ணாடி, திருமண உதவித் தொகை, ஈமச்சடங்கு, மகப்பேறு, கருச்சிதைவு, ஓய்வூதியம், இயற்கை மரணம் மற்றும் விபத்து மரணத்துக்கான உதவித் தொகைகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகிறது. இவ்வாறு சிறுபான்மையின மக்களின் மேம்பாட்டுக்காக தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்களை அறிந்து தகுதியான திட்டங்களுக்கு விண்ணப்பித்து பயன்பெற வேண்டும்.

இவ்வாறு பேசினார்.

தொடர்ந்து, தருமபுரி மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் மூலம் 29 பயனாளிகளுக்கு ரூ.5 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், தருமபுரி மாவட்ட கிறிஸ்தவ மகளிர் உதவும் சங்கம் மூலம் 31 பயனாளிகளுக்கு ரூ.6 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், உபதேசியர் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் 45 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் என 105 பயனாளிகளுக்கு ரூ.12 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சையது முகைதீன் இப்ராகிம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி

நில அளவை அலுவலர்கள் ஆர்ப்பாட்டம்

■ கிருஷ்ணகிரி

9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, கிருஷ்ணகிரி ஆட்சியர் அலுவலகம் முன்பு, தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்துக்கு, மாவட்ட தலைவர் பெரியசாமி தலைமை வகித்தார். செயலாளர் பிரகாஷ் வரவேற்றார். அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் சந்திரன், செயலாளர் கல்யாணசுந்தரம், மாவட்ட மகளிர் அணி துணைக் குழு அமைப்பாளர் ஜெகதாம்பிகா, வருவாய் அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் ஜெய்சங்கர் ஆகியோர் கோரிக்கை குறித்துப் பேசினர்.

ஆர்ப்பாட்டத்தில், 'களப் பணியாளர்கள் செய்யும் அனைத்துப் பணிகளையும் கணக்கில் கொண்டு ஆய்வு மேற்கொள்ளவும், மனித திறனுக்கு ஏற்ற குறியீடுகளை வரையறுக்கவும் வேண்டும். நில அளவையர்களுக்குப் பதவி உயர்வு வழங்க வேண்டும்' என்பன உள்ளிட்ட 9 அம்ச கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. மாவட்டப் பொருளாளர் மோகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஓசூர் பேருந்து நிலையம் பகுதியில் குற்றங்களை தடுக்க 75 இடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணி தீவிரம்

■ ஓசூர்

ஓசூர் பேருந்து நிலையம் பகுதியில் குற்றங்களைத் தடுக்க மாநகராட்சி சார்பில், 75 இடங்களில் துல்லிய கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

தொழில் நகரமான ஓசூர் கர்நாடக மாநில எல்லையில் உள்ளது. இப்பகுதியில் உள்ள 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும், வெளிமாநில தொழிலாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

இதனால், ஓசூர் பேருந்து நிலையத்திலிருந்து பல்வேறு ஊர்களுக்கும், வடமாநிலங்களுக்கும் சுமார் 500-க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் பேருந்துகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோல, ஓசூர் பகுதியைச் சுற்றியுள்ள கிராம மக்கள் பல்வேறு தேவைகளுக்காக ஓசூருக்கு வந்து செல்வதால், பேருந்து நிலையம் 24 மணி நேரமும் மக்கள் நடமாட்டத்துடன் பரபரப்பாக இருக்கும்.

இந்நிலையில், பேருந்து நிலையம் மற்றும் சுற்றியுள்ள சாலைகளில் பல்வேறு குற்றங்கள் அதிகரித்து வந்தன. இக்குற்றங்களைக் கண்காணித்து தடுக்க வேண்டும் என தொடர்ந்து பயணிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதையடுத்து, பேருந்து நிலையம் மற்றும் அதைச் சுற்றியுள்ள சாலைகளில் குற்றங்களைத் தடுக்கும் வகையில், மாநகராட்சி சார்பில், பேருந்து நிலைய வளாகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் 75 இடங்களில் துல்லிய கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்பணி நடைபெற்று வருகிறது.

இதுதொடர்பாக மாநகராட்சி ஊழியர்கள் கூறியதாவது:

ஓசூர் பேருந்து நிலையத்தில் 18 கேமராக்கள் மட்டும் பொருத்தப்பட்டிருந்தன.

இதில், சில கேமராக்கள் செயல்படாமல் இருந்தன. இந்நிலையில் பேருந்து நிலையம் மற்றும் அருகில் உள்ள சாலைகளில் அதிக அளவில் குற்றங்கள் நடந்து வந்தன. இதை தடுக்க தற்போது, மாநகராட்சி சார்பில், 75 துல்லிய கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

இதற்கான கட்டுப்பாட்டு அறை பேருந்துநிலையத்தில் உள்ள முதல் தளத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கேமரா பொருத்தும் பணிகள் நிறைவடைந்ததும், கட்டுப்பாட்டு அறை காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, கண்காணிக்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி:

repsalem@hindutamil.co.in

TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
யூனிட் – 1 : காகிதபுரம் – 639 136. கரூர் மாவட்டம், தமிழ்நாடு. தொலைபேசி : 04324 – 277001 (10 இணைப்புகள்)
யூனிட் – 2 : மொண்டிபட்டி – 621 306. திருச்சி மாவட்டம், தமிழ்நாடு. தொலைபேசி : 04332 – 261600.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி எண்.	பணியின் விவரம்	கடைசி நாள்
242533 000336	TNPL காகிதபுரம் சிமெண்ட் ஆலையிலிருந்து தமிழகத்தில் பல்வேறு இடங்கள் மற்றும் மற்ற மாநிலங்களில் சில இடங்களுக்கு சிமெண்ட் எடுத்துச் செல்லுதல்	07.01.2025
242523 003198	திருச்சி மாவட்டம் TNPL அலகு-2ல் உள்ள BM பிளான்டில் முறிந்த அட்டைகளை கையாளுதல். ரீல்களை கையாளுதல் மற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்ளுதல்	03.01.2025
242513 005228	TNPL அலகு-I pulpmill-ல் ஒப்பந்ததாரர் உபகரணங்களைப் பயன்படுத்தி உதிரி கரும்புச் சக்கையை இறக்குதல் மற்றும் உட்செலுத்துதல்	03.01.2025
242513 005229	ஃபினிஷிங் ஹாலில் கட்டர்கள் 1, 2 & 3 லிருந்து பெறும் கட் ஷீட்களை ஃபினிஷிங், ரீமிங் மற்றும் லேபிளிங் செய்தல் மற்றும் TNPL Guillotine மெஷினைப் பயன்படுத்தி நிராகரிக்கப்பட்ட மற்றும் விடுபட்ட ரீம்களிலிருந்து பேப்பர் ரீம்களைப் பிரித்தெடுத்தல்.	03.01.2025
242513 005230	Pasaban கட்டரில் வெட்டுத்தாள்களை நிறைவு செய்து சிப்பங்களாகக் கட்டி அடையாளச் சீட்டிடுதல் மற்றும் Trim பல்பாரில் காகித துண்டுகளை அகற்றுதல் மற்றும் தொடர்பான பணிகளை மேற்கொள்ளுதல்.	03.01.2025
இமெயில்	242533000336 - purchase.trans@tnpl.co.in 242523003198 - tos.u2@tnpl.co.in 242513005228 ; 5229 ; 5230 - tech_services@tnpl.co.in	

பிழை திருத்தங்கள் இருப்பின் அவை TNPL மற்றும் NIC இணையதளங்களில் மட்டுமே வெளியிடப்படும். விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், ஒப்பந்தப்புள்ளி கட்டணம் மற்றும் பிணை வைப்புத்தொகை ஆகியவற்றை www.tnpl.com / https://tntenders.gov.in/nicgep/app என்ற இணையதளங்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
செ.ம.தொ.இ/5544/ஒப்பந்தப்புள்ளி/2024 நாட்டின் இயற்கைவளம் போற்றும் காகிதம் செய்வோம்

'உங்களைத் தேடி உங்கள் ஊரில்' திட்டத்தின் கீழ்

ஊத்தங்கரை வட்டத்தில் ஆட்சியர் கள ஆய்வு

■ கிருஷ்ணகிரி

ஊத்தங்கரை வட்டத்தில், 'உங்களைத் தேடி உங்கள் ஊரில்' திட்டத்தின் கீழ் ஆட்சியர் கே.எம்.சரயு நேற்று 2-வது நாளாக கள ஆய்வு மேற்கொண்டார்.

இதில், ஊத்தங்கரை பேருந்து நிலையத்தில் தூய்மை பணிகள், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், ஃபெஞ்சல் புயல் மழை வெள்ளத்தின்போது பரசனேரி ஏரியிலிருந்து வெளியேறிய வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் சீரமைக்கும் பணிகளை ஆட்சியர் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு வந்த நோயாளிகளிடம், சிகிச்சை முறைகள் குறித்துக் கேட்டறிந்தார். பின்னர், ஊத்தங்கரை, காரப்பட்டு அரசு தொடக்கப் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வந்த உணவு சமைக்கும் பணிகளை ஆய்வு செய்து, மாணவர்களுக்கு உணவு வழங்கினார். மேலும், காரப்பட்டு கிராம நிர்வாக அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், பல்வேறு சான்றிதழ்கள் வழங்கும் பணிகள், பட்டா பதிவேடுகள் பராமரிப்பு, பட்டா கோரி விண்ணப்பித்து நிலுவையிலுள்ள மனுக்கள் விவரம், பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் வழங்கும் பதிவேடுகள் ஆகியவற்றைப் பார்வையிட்டார்.

ஆய்வின்போது, வேளாண்மை இணை இயக்குநர் பச்சையப்பன், பேரூராட்சி செயல் அலுவலர் ரவிசங்கர், வட்டாட்சியர் திருமால், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாலாஜி, தவமணி, துணை வட்டாட்சியர் (தேர்தல்) சக்தி, பேரூராட்சி பொறியாளர் மகேந்திரன், பேரூராட்சித் தலைவர் அமானுல்லா கான், காரப்பட்டு ஊராட்சித் தலைவர் ரமா தேவி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இந்து தமிழ் திசை
பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரகரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு, இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் குழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் (ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)
பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" எனும் அடிப்படையில் மின் ஏலத்தின் (e-auction) மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	18.12.2024-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நான் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	45389420001128 & 45389410000823	1) திரு. மகேஷ் Y K, மேலும் M/s. Smitha Sree Fashion, 2) திருமதி. சகுந்தலா	06.08.2024	22.10.2024	ரூ.29,26,873.20 (ரூபாய் இருபத்தி ஒன்பது இலட்சத்து இருபத்தி ஆறாயிரத்து எண்ணூற்றி எழுபத்தி மூன்று மற்றும் பைசா இருபது மட்டும்)	03.01.2025 நேரம் : காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.26,94,000/- (ரூபாய் இருபத்தி ஆறு இலட்சத்து தொண்ணூற்றி நான்காயிரம் மட்டும்)	ரூ.2,69,400/- (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்தி ஒன்பதாயிரத்து நானூறு மட்டும்)	09.01.2025 @ மாலை 02.00 மணி	08.01.2025, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், தலைமை அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071.

அடமான சொத்தின் விவரம் : கெம்பட்டி கிராமம், தேன்கனிக்கோட்டை தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம் மற்றும் கேலமங்களம் சார்-பதிவு மாவட்டம் மற்றும் கெம்பட்டி கிராமம் பஞ்சாயலத்து எல்லைகள் மற்றும் தால்லி யூனியன் கவுன்சில். கெம்பட்டி கிராமம் சர்வே எண். 731, Dry.Ext.Hec.1.54.0 Asst. Rs.0.94np தற்போது மேலும் துணை பிரிவு (1) சர்வே எண். 731/1, Dry. Ext. Hec. 0.95.5 (அல்லது) ஏக். 2.36 சென்ட்ஸ், Asst. Rs.0.59np (2) சர்வே எண். 731/2, Dry. Ext. Hec. 0.58.5 (அல்லது) ஏக். 1.44 சென்ட்ஸ், Asst. Rs.0.35np. மேற்கூறப்பட்ட இரண்டு சர்வே எண்கள் பரப்பு ஏக்கர் 3.80 சென்ட்ஸ். இந்த நிலம் "ஆஷிர்வாத் அம்பாரா" பேஸ்-3 என்ற பெயரில் பல வீட்டு சைட்டுகளான ஒப்புதல் லேஅவுட்டாக மாற்றப்பட்டது, நகரம் மற்றும் நாட்டுபுகுதி திட்டம் ஆணையம், துணை இயக்குநர் அவர்களின் ஒப்புதல், ஒப்புதல் எண். 16/2008 மூலம் அனுமதி வழங்கப்பட்டது, இதில் மனை எண். 06 அளவுகள் 2100 சதுர அடி பரப்பு, எல்லைகள் பின்வருமாறு: கிழக்கு : மனை எண்.5, மேற்கு : சாலை, வடக்கு : பேஸ்-2 மற்றும் தெற்கு : மனை எண்.7. இதன் எல்லைகள் மற்றும் அளவுகள் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம் : 42 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம் : 42 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம் : 50 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம் : 50 அடி. மொத்த அளவுகள் 2100 சதுர அடி பரப்பு (அல்லது) 195.09 சதுர மீட்டர் நிலம் அத்துடன் அனைத்து லேஅவுட் சாலைகள் பொது உரிமைகள்.

மின் ஏலமானது "உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு" என்ற அடிப்படையில் "ஆன்லைனில்" நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் M/s. 4 Closure இணையதளம் https://bankauctions.in & www.foreclosureindia.com மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு M/s. 4 Closure, தொடர்பு திரு.M.சீனிவாசுலு தொடர்பு எண். 8142000809. Email id: info@bankauctions.in / srinivas@bankauctions.in.
மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் விளக்களுக்கு ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள் திரு. ரஞ்சன் நாயக் (மொபை